# டிசம்பர் – 07 – வெள்ளி

## புனித அம்புறோஸ்

## ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு யாருக்கு நான் அஞ்சவேண்டும்? – திபா 27 : 1

---

### முதல் வாசகம் : ஏசாயா 29 : 17 - 24

இன்னும் சிறிது காலத்தில் லெபனோன் வளம்மிகு தோட்டமாக மாறுமன்றோ? வளம் மிகு நிலம் காடாக ஆகிவிடுமன்றோ? அந்நாளில் காது கேளாதோர் ஏட்டுச் சுருளின் வார்த்தைகளைக் கேட்பர் பார்வையற்றோரின் கண்கள் காரிருளிலிருந்தும் மையிருளிலிருந்தும் விடுதலையாகிப் பார்வை பெறும். ஒடுக்கப்பட்டோர் மீண்டும் ஆண்டவரில் மகிழ்ச்சி பெறுவர் மானிடரில் வறியவர் இஸ்ரயேலின் தூயவரில் அகமகிழ்வர். கொடியோர் இல்லாதொழிவர் இகழ்வோர் இல்லாமற் போவர் தீமையில் நாட்டம் கொள்வோர் அழிந்து போவர். அவர்கள் ஒருவர்மேல் பொய்க் குற்றம் சாட்டி, நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்குவோரை இடறச் செய்கின்றனர் பொய் புனைந்து நேர்மையாளரின் வழக்கைப் புரட்டுகின்றனர். ஆதலால் ஆபிரகாமை மீட்ட ஆண்டவர் யாக்கோபு வீட்டாரைப் பற்றிக் கூறுவது இனி யாக்கோபு மானக்கேடு அடைவதில்லை அவன் முகம் இனி வெளிறிப் போவதுமில்லை. அவன் பிள்ளைகள் என் பெயரைத் தூயதெனப் போற்றுவர் நான் செய்யவிருக்கும் என் கைவேலைப்பாடுகளைக் காணும்போது யாக்கோபின் தூயவரைத் தூயவராகப் போற்றுவர் இஸ்ரயேலின் கடவுள்முன் அஞ்சி நிற்பர். தவறிழைக்கும் சிந்தை கொண்டோர் உணர்வடைவர் முறுமுறுப்போர் அறிவுரையை ஏற்றுக் கொள்வர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு

### நற்செய்தி : மத்தேயு 9 : 27 - 31

அக்காலத்தில் இயேசு தன் சொந்த ஊரை விட்டு வெளியே சென்றபோது பார்வையற்றோர் இருவர், ”தாவீதின் மகனே, எங்களுக்கு இரங்கும்” என்று கத்திக்கொண்டே அவரைப் பின்தொடர்ந்தனர். அவர் வீடு வந்து சேர்ந்ததும் அந்தப் பார்வையற்றோரும் அவரிடம் வந்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, ”நான் இதைச் செய்ய முடியும் என நம்புகிறீர்களா?” என்று கேட்டார். அதற்கு அவர்கள், ”ஆம், ஐயா” என்றார்கள். பின்பு அவர் அவர்களின் கண்களைத் தொட்டு, ”நீங்கள் நம்பியபடியே உங்களுக்கு நிகழட்டும்” என்றார். உடனே அவர்களின் கண்கள் திறந்தன. இயேசு அவர்களை நோக்கி. ”யாரும் இதை அறியாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்” என்று மிகக் கண்டிப்பாகக் கூறினார். ஆனால் அவர்கள் வெளியேபோய் நாடெங்கும் அவரைப் பற்றிய செய்தியைப் பரப்பினார்கள்.

**தியானம் :** திருவருகைக்கால முதல் வெள்ளியில் ஆண்டவர் இயேசுவைக் குறித்து எமது பார்வை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டுமென நற்செய்தி கூறுகிறது. வரவிருக்கும் விண்ணரசின் போதனையைக் கேட்டவர்கள் “இயேசுவைப் பற்றிய செய்தியைப் பரப்பினார்கள்“ (மத்தேயு 9:31). இயேசு கடவுள் பற்றியும், கடவுளின் ஆட்சி பற்றியும் மாத்திரம் போதிக்கவில்லை மாறாகக் கடவுளின் அன்பை அறிவித்து, மக்களின் துன்பத்தைப் போக்குவதைச் செயல்முறையில் காண்பித்தார். இதனால், பார்வையற்ற இருவர் “தாவீதின் மகனே, எங்களுக்கு இரங்கும்“ என்று கத்திக்கொண்டே அவர் பின்னே சென்றதாக நற்செய்தியாளர் (மத்தேயு 9:27) தெளிவாகக் குறிப்பிடுகின்றார். தாவீதின் வழித்தோன்றலாக மெசியா வருவாரென யூத மக்கள் அறிந்திருந்ததால், இயேசுவை மெசியாவென அடையாளம் கண்ட இருமனிதரும் புறப்பார்வை அற்றவர்களாக இருந்தாலும், அகப்பார்வை கொண்டிருந்தார்கள் என்பதை நற்செய்தி சுட்டிக்காட்டுகிறது. எனினும், போதகர் இயேசுவை மெசியாவென அழைத்த அந்த இருவருக்கும் இயேசுவிடமிருந்து தங்களுக்குப் பார்வை கிடைப்பதே எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததை நம்ப வேண்டும் என்பதே இயேசுவின் கோரிக்கை. இயேசு அவர்களின் கண்களைத் திறந்ததால் அவர்கள் புது வாழ்வடைந்து, தங்கள் மகிழ்ச்சியால் “நாடெங்கும் போய் இயேசுவைப் பற்றிய செய்தியைப் பரப்பினார்கள்“ (மத்தேயு 9:31). இயேசுவை நம்பிக்கையோடு அணுகினால் நம் புறக்கண்கள் மட்டுமல்ல, அகக்கண்களும் திறக்கப்படும். நம்மைச் சூழ்ந்திருக்கின்ற பாவ இருள் அகலும். பார்வையற்ற மனிதர்கள் புறக்கண் பார்வை பெறுவதற்கு முன்னரே அகக்கண் திறக்கப்பட்டோராக இயேசுவை அணுகியது போல, நாமும் இத்திருவருகைக் காலத்தில் உள்ளொளி பெற்று நமதாண்டவர் இயேசுவிடம் சென்றால், அவர் வாக்களிக்கின்ற நன்மைகளைக் “கண்டுகொள்வோம்“. இத்திருவருகைக் காலத்தை ஆதாயமாக்கி, தகுந்த பாவப்பொறுத்தல் பெற்று, நாமும் புதுப்பார்வை அடைந்தவர்களாக மாற்றமடைந்து, இயேசு பற்றிய நற்செய்தியை உலகெங்கும் அறிவிக்கப் புறப்படலாம்.